

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரன், தனது பிறந்தநாளினையொட்டி தலைவர் அவர்களது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றதோடு, தனது மகள் டாக்டர் சினேகாசாலினி இளநிலை மருத்துவ (M.B.,B.S.,) பட்டம் பெற்ற சான்றிதழினை கழகத் தலைவர் அவர்களிடம் வழங்கி வாழ்த்துப் பெற்றார். அதுபோது அவரது துணைவியார் முன்னாள் அரசு வழக்கறிஞர் கஸ்தூரி இரவிச்சந்திரன், மகன்கள் வழக்கறிஞர் ஜி.ஜே.தரணிராஜ், ஆர்.கே.ரீதிக்ராஜ்குமார் மருமகள் வழக்கறிஞர் பொன்னரசி ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தலைமைக் கழகமான அண்ணா அறிவாலய வரவேற்பாளர் கி.பிரபாகரன் தனது 50வது பிறந்தநாளினையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

நீதியரசர் குரியன் ஜோசப் குழு கலைப்பு:

தமிழ்நாட்டுக்கு துரோகம் இழைத்த Dummy CM!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, நவ. 8-

நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான குழு கலைக்கப்பட்டதற்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகளை ஆராய்வதற்காக நம் திராவிட மாடல் ஆட்சியில் அமைக்கப்பட்ட குழுவை இந்த சோப்ளாங்கி அரசு கலைத்திருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.



முன்னாள் நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில், நிர்வாக - சட்ட மற்றும் பொருளாதார வல்லுநர்கள் இடம்பெற்றிருந்த இக் குழுவை கலைத்து இருப்பதன் மூலம் இந்த Dummy CM தமிழ்நாட்டுக்கு துரோகம் இழைத்துள்ளார்.

தமிழ்நாடு சட்ட ஆணையத்தின் பணிகளைக் காரணம் காட்டி, இந்தக்குழுவை ரத்து செய்திருக்கும் இவர்கள், மாநில உரிமைகளைப் பாதுகாக்க வேறென்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்?

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

த.வெ.க. அரசின் அலட்சியத்தால் பறிபோன 9 மீனவர்களின் உயிர்!

மீனவர்களின் குடும்பத்தினருக்கு தி.மு.க. சார்பில் நிவாரண உதவிகள்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆறுதல் கூறி வழங்கினார்!

சென்னை, நவ. 8-

நடுக்கடலில் புயலில் சிக்கி பலியான காசிமேடு மீனவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களது குடும்பத்தினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆறுதல் கூறி, நிதியுதவி வழங்கினார்.

சென்னை காசிமேட்டில் இருந்து ஆழ் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 9 மீனவர்கள், முரசு புயலின் சீற்றத்தில் சிக்கி நடுக் கடலில் படகு கவிழ்ந்ததால் மாயமாகினர். ஆந்திர கடற்கரையில் 7 மீனவர்களின் உடல்கள் கரை ஒதுங்கிய நிலையில், 2 மீனவர்களின் நிலை என்ன என்பது இதுவரை தெரியாததால் அவர்களின் உறவினர்கள் கலக்கத்தில் உள்ளனர். ஆனால், நடுக்கடலில் நிற்கதியாய் தவித்து மாயமான, கல்நெஞ்சையும் கறைய வைக்கும் இந்த சம்பவத்தில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூட முதலமைச்சர் விஜய் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், த.வெ.க. அரசின் அலட்சியத்தால் பறிபோன 9 மீனவர்களின் வீடுகளுக்குதனித்தனியாகசென்று எதிர்க்கட்சித்தலைவர்உதயநிதிஸ்டாலின் ஆறுதல் கூறினார். தண்டையார்பேட்டை விநாயகபுரத்தில் உயிரிழந்த மீனவர் குப்புசாமி இல்லத்திற்குச் சென்று திருவுருவப்படத்துக்கு மாரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி தி.மு.க. சார்பில் நிதியுதவி வழங்கினார்.

இதைத்தொடர்ந்து, சென்னை தண்டையார்பேட்டை ஒத்தவாடை தெருவை சேர்ந்த மீனவர் முருகனின் இல்லத்துக்கு நேரில் சென்று அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர், தண்டையார்பேட்டை பல்லவன் நகரில் வசிக்கும் மீனவர் குப்பன் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. சார்பில் நிதியுதவியையும் வழங்கினார்.

இதையடுத்து, காசிமேடு காசிபுரத்தில் வசிக்கும் சூர்யா என்ற மீனவரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து உதயநிதி ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.

இதைத்தொடர்ந்து, காசிமேடு இந்திரா நகரில் மீனவர் மோகனின் இல்லத்திற்குச்சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தி.மு.க. சார்பில் நிவாரண உதவியையும் வழங்கினார்.

கலைப்பயணத்தில் மேலும்

பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துகிறேன்!

கலைஞானி கமல்ஹாசன் எம்.பி. பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, நவ.8-

“கலைப்பயணத்தில் மேலும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துகிறேன்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞானி கமல்ஹாசன் அவர்களின் பிறந்த நாளை யொட்டி வாழ்த்துத் தெரிவித்து தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

திரையுலகில் கலைமொழியைச் செழுமைப்படுத்தியும், அரசியலில் தமிழ்மொழியின் மாண்பு, மாநில உரிமைகள் உள்ளிட்டவற்றுக்காகத் தமது கருத்தாற்றலை வெளிப்படுத்தியும் வரும் அன்புச் சகோதரர், மாநிலங்களவை உறுப்பினர், மக்கள் நீதி மையத் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!



கலையை நேசிப்பதிலும், கருத்துகளைப் பரிமாறுவதிலும் என்றும் இளமை குன்றாத தாங்கள், கலைப்பயணத்தில் மேலும் பல சாதனைகளைப் படைக்கவும், அறிவார்ந்த சிந்தனைகளாலும் அரசியல் செயல்பாடுகளாலும் சமூகத்திற்குச் சிறந்த பங்களிப்புகளை வழங்கவும் வாழ்த்துகிறேன்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மாநில சுயாட்சிக் கொள்கை மீது வெறுப்பா? இல்லை

டெல்லி தலைமையின் உத்தரவா?

நீதியரசர் குரியன் ஜோசப் குழு கலைப்பு குறித்து கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, நவ. 8-

நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான குழு கலைக்கப்பட்டது குறித்து கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கவும் இந்தியாவில் உள்ள மாநிலங்களின் உரிமைப் போராட்டத்திற்கு வழிகாட்டும் வகையிலும் கழக ஆட்சியில் நீதியரசர் திரு. குரியன் ஜோசப் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவை த.வெ.க. அரசு கலைத்திருப்பது கண்டனத்திற்குரியது.



ஏற்கனவே இந்தக் குழு ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த தங்களது ஆய்வறிக்கையின் முதல் பாகத்தைச் சமர்ப்பித்துவிட்ட நிலையில், குழுவின் பணி முழுமையாக நிறைவடைவதற்கு முன்பே கலைப்பதற்கான அவசியம் என்ன? மாநில சுயாட்சிக் கொள்கையின் மீதான வெறுப்பா? இல்லை டெல்லி தலைமையின் உத்தரவா?

மாநில தன்னாட்சி உரிமையைப் பாதுகாப்போம் என்று வசனம் பேசிக்கொண்டே மாநில சுயாட்சிக்குக் குழிபறித்திருக்கிறது த.வெ.க. அரசு. இந்தியாவில் கூட்டாட்சி அரசியலை வலுப்படுத்துவதற்கான தமிழ்நாட்டின் முன்னெடுப்பைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதிகாரத்தை கையில் வைத்துள்ள முதலமைச்சர்

வெற்று அறிக்கையை வெளியிட்டு குறுகிய அரசியல் செய்வதா?

முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் அறிக்கை!

கோவை, நவ.8 -

“பெரியார் அறிவுலகப் புத்தக முறைகேடு குற்றச்சாட்டு தொடர்பாக அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள முதலமைச்சர் வெற்று அறிக்கையை வெளியிட்டு குறுகிய அரசியல் செய்யக் கூடாது!” என்று முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கோவை பெரியார் அறிவுலகத்தில் இடம்பெற்றுள்ள சில நூல்கள் தவறான தகவல்களையும் பிழையான வரலாற்றையும் உள்ளடக்கியதாக இருப்பதையும், அப்புத்தகங்களின் வெளியீட்டாளர்கள் மற்றும் அதன் எழுத்தாளர்களின் பெயர் மற்றும் முகவரிகள் போலியாக இருப்பதையும் எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்கள் தான் எழுதிய கட்டுரை ஒன்றில் வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தார்.

இதை தங்களது அரசியல் அருவெறுப்புக்கு பயன்படுத்தப் பார்க்கிறது த.வெ.க.

எதற்கெடுத்தாலும் தி.மு.க. வைக் குற்றம் சொல்லியே பழக்கப்பட்ட த.வெ.க. அரசைச் சேர்ந்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சரும் தி.மு.க. மீது புழுதி வாரி இறைப்பதற்கென்றே செயல்படும் அக்கட்சியின் “Virtual Abusers” கூட்டமும், வழக்கம்போல் பழியைத் தூக்கி தி.மு.க. மீது போட்டுவிடலாம் என்று செயல்பட்டனர்.



இதில் அதிர்ச்சியான ஆச்சர்யம் என்ன என்றால், இது வரை சட்டம்ஒழுங்கு, விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு உள்ளிட்ட எந்தப் பிரச்சினைக்கும் வாய்த்திறக்காத முதலமைச்சரும் அதிசயமாய் அறிக்கை வெளியிட்டுள்ளார்; மக்களைத் திசைத்திருப்ப இது பயன்படும் என்ற நப்பாசையால்!

முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருந்துகொண்டு, நொடிப்பொழுதில் அரசின் அத்தனை ஆவணங்களையும் ஆய்வு செய்யும் அதிகாரத்தையும் கொண்டுள்ள விஜய் அவர்கள், பெரியார் அறிவுலகப் புத்தகங்கள் வாங்கியது தொடர்பான சர்ச்சை வெளியானதும் அது குறித்து முறையாக ஆய்வு செய்திருக்க வேண்டும். அதை அவர் பொறுப்புடன் செய்ததாகத் தெரியவில்லை.

நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்கள் தரமானவையாக இருக்க வேண்டும். அவற்றில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் என, “வெளிப்படையான நூல் கொள்முதல் கொள்கையை” முதலில் உருவாக்கியதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை மறைத்துவிட்டு த.வெ.க. வினர் பரப்புவது அவதூறு மட்டுமே.

கோவையில் அமைய வுள்ள மாபெரும் நூலகத்தில் தரமான நூல்கள் இடபெற வேண்டும் என மதிப்புமிக்க எழுத்தாளர்களையும் கல்வியாளர்களையும் உள்ளடக்கிய நூல் பரிந்துரைக் குழுவினை கடந்த தி.மு.க. ஆட்சியில் அமைத்தோம். புத்தக முறைகேட்டை வெளிகொண்டுவந்த கட்டுரையை எழுதிய எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்களே, அந்த நூல் பரிந்துரைக் குழுவில் இடம்பெற்றிருந்தவர் தான்.

தமிழ்நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான நூலகங்களை உருவாக்கி, இந்திய ஒன்றியமே வியந்து பார்க்கும் வகையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், கலைஞர் நூற்றாண்டு நூலகம் உள்ளிட்ட நூலகங்களை அமைத்த தி.மு.க.வின் திட்டங்களில் இதற்குமுன் இப்படிப்பட்ட குறைகள் ஏதாவது எழுந்துள்ளனவா?

ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, தி.மு.க.வின் திட்டங்களைச் சிதைப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படும் த.வெ.க. ஆட்சியில் இத்தகைய செய்தி வந்திருப்பதால், இதில் உள்நோக்கம் ஏதும் உள்ளதோ, சதிச் செயல்கள் ஏதும் உள்ளனவோ என்று கருத வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட புத்தகங்கள், அதனை எழுதிய எழுத்தாளர்கள், அனுமதி பெற்ற பதிப்பகங்கள் ஆகியவற்றின் பின்னணி வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும்.

எனவே, வழக்கம் போல் தி.மு.க. தி.மு.க. என்று சொல்லாமல், சுதந்திரமான அமைப்பைக் கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை அவசியம் என்பதே தி.மு.கழகத்தின் நிலைப்பாடு.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.